# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.234/மா/2024

நாள் 29.08.2025

| | | |
|---|---|---|
| திரு. கோ. கோவிந்தராஜ்<br>சென்னை | --- | முறையீட்டு மனுதாரர் |
| மண்டல அலுவலர்<br>மண்டலம்–10<br>பெருநகர சென்னை மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவரின் 19.11.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.11.2024 அன்று பெறப்பட்டு 234/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–600 083, அசோக்நகர், 15–வது தெரு, கதவு எண் 22/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. கோ. கோவிந்தராஜ் என்பவர் தனது 19.11.2024 நாளிட்ட மனுவில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனத் தெரிவித்து 19.08.2024–ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பிய புகார் மனுவின் நகலினை இணைத்துள்ளார். மேற்படி மனுவின் நகலில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் சமூக செயற்பாட்டாளர். பொதுமக்களுக்கான பொதுப்பணிகளை சட்டரீதியாக நீதிமன்றம் வரை சென்று செய்து வருவதற்கான சான்றுகள் ஏராளமாக என்னிடம் உள்ளது. கதவு எண் 7/3, பக்கத்து வீடு, உமாபதி தெரு விரிவு, சாமளாவதனா தெரு, Corner Building என்ற முகவரியில் இருபுற சாலைகளில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு சுமார் 10,000 சதுரடியில் கட்டப்பட்டு பணிமுடியும் நிலையில் உள்ளதை இம்மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப்படங்களில் காணலாம். இக்கட்டிட உரிமையாளர் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைக்க தயாராக கட்டுமான பொருட்களை குவித்து இருந்ததால் 1913 எண்ணிற்கு போன் செய்து புகார் அளிக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. மேலும் இக்கட்டிடம் முன்பு பொருத்தப்பட்டுள்ள ராட்சத இரும்பு கேட்கள் திறந்தால் சுமார் 10 அடி சாலை குறுக்கே வரை உள்ளதால் அங்கு போக்குவரத்து விபத்துகள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது. மாநகராட்சி நடைபாதையில் அமைத்துள்ள கேட்களை அப்புறப்படுத்தி Compound சுவருக்குள் திறந்து பூட்ட கேட்கள் அமைத்து கொள்ள கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தி Notice அளித்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் வரை பணிமுடிவு சான்று வழங்கக் கூடாது என்று உத்திரவிடக் கோரி இம்மனு அளிக்கப்படுகிறது." என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 09.12.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டலம் 10–ன் மண்டல அலுவலர் தனது கடிதம் மஅ10. ந.க. எண் 234/மா/2024 நாள் 02.06.2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எண் 7/3ற்கு அருகில் உள்ள உமாபதி தெரு மற்றும் ஷியாமளா வதனா தெரு சந்திப்பு என்ற முகவரியில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள குடியிருப்பில் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைத்து நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வருகிறது என கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் பொது நடைபாதையை ஆக்கிரமித்து இயங்கி வந்த பகுதி அகற்றப்பட்டது.

மேலும், மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளபடி மேலும் குடியிருப்பின் தரைத்தளத்தில் அமைந்துள்ள கேட்களை கட்டிடத்தின் சுற்றுச் சுவருக்குள் திறந்து பூட்டுமாறு அமைத்துக் கொள்ள கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய கூற்றுப்படி மனுதாரரின் புகாரானது பரிசீலிக்கப்பட்டு தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன." என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 15.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 08.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 31, கோட்டம் 131, கதவு எண் 7/3, உமாபதி தெரு விரிவு, ஷியாமளாவதனா தெரு, Corner Building என்ற முகவரியில் இருபுற சாலைகளில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு சுமார் 10,000 சதுரடியில் கட்டிய அதன் கட்டிட உரிமையாளர் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைப்பாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைத்துள்ளார். மேலும் இக்கட்டிடம் முன்பு பொருத்தப்பட்டுள்ள ராட்சத இரும்பு கேட்கள் திறந்தால் சுமார் 10 அடி சாலை குறுக்கே வரை உள்ளதால் அங்கு போக்குவரத்து விபத்துகள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது. மாநகராட்சி நடைப்பாதையில் அமைத்துள்ள கேட்களை Compound சுவர் உட்புறம் திறந்து பூட்டும் வகையில் அமைத்து கொள்ளுமாறு கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்துமாறும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றும் வரை பணிமுடிவு சான்று வழங்கக் கூடாது என்று உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் இளநிலை பொறியாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 15.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எண் 7/3ற்கு அருகில் உள்ள உமாபதி தெரு மற்றும் ஷியாமளா வதனா தெரு சந்திப்பு என்ற முகவரியில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிட்டுள்ள குடியிருப்பில் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramps அமைக்கப்பட்டுள்ளதை கள ஆய்வில் கண்டறியப்பட்டது. அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பொது நடைபாதை பகுதி அகற்றப்பட்டது.

மேலும், மனுதாரர் தனது புகாரில் தெரிவித்துள்ளபடி மேலும் குடியிருப்பின் தரைத்தளத்தில் அமைந்துள்ள கேட்களை கட்டிடத்தின் சுற்றுச் சுவருக்குள் திறந்து மூட்டுமாறு அமைத்துக் கொள்ள கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 31, கோட்டம் 131, கதவு எண் 7/3, உமாபதி தெரு விரிவு, ஷியாமளாவதனா தெரு, Corner Building என்ற முகவரியில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு சுமார் 10,000 சதுரடியில் கட்டிய கட்டிடடத்தின் உரிமையாளர் இருபுற சாலைகளிலும் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramp அமைத்துள்ளார் என்பதும், இக்கட்டிடம் முன்பு பொருத்தப்பட்டுள்ள ராட்சத இரும்பு கேட்கள் திறந்தால் சுமார் 10 அடி வரை சாலை குறுக்கே உள்ளதால் அங்கு போக்குவரத்து விபத்துகள் நேரிட அதிக வாய்ப்புகள் உள்ளது என்பதும், மாநகராட்சி நடைப்பாதையில் அமைத்துள்ள கேட்களை Compound சுவர் உட்புறம் திறந்து மூட்டும் வகையில் அமைத்து கொள்ளுமாறு கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்துமாறும், மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்றும் வரை பணிமுடிவு சான்று வழங்கக் கூடாது எனவும் கோரியுள்ளது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் அளித்த புகாரின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் எண் 7/3ற்கு அருகில் உள்ள உமாபதி தெரு மற்றும் ஷியாமளா வதனா தெரு சந்திப்பு என்ற முகவரியில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramps அமைக்கப்பட்டு இருந்ததை கள ஆய்வில் கண்டறியப்பட்டது என்பதும், அதனை அகற்றிட அறிவுறுத்திய பின்னரும் அதன் உரிமையாளர் அகற்றாத காரணத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பொது நடைபாதை பகுதி அகற்றப்பட்டது என்பதும், புகாரில் தெரிவித்துள்ளபடி மேற்கண்ட குடியிருப்பின் தரைத்தளத்தில் அமைந்துள்ள கேட்களை கட்டிடத்தின் சுற்றுச் சுவருக்குள் திறந்து மூட்டுமாறு அமைத்துக் கொள்ள கட்டிட உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி,

மண்டலம் 10–ன் மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 10, பகுதி 31, கோட்டம் 131, கதவு எண் 7/3, உமாபதி தெரு மற்றும் ஷியாமளாவதனா தெரு சந்திப்பு என்ற முகவரியில் 4 தளம் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பின் இருபுற சாலைகளில் மாநகராட்சிக்கு சொந்தமான நடைபாதை மற்றும் சாலையை ஆக்கிரமித்து Steps & Ramps அமைக்கப்பட்டு இருந்ததை கள ஆய்வில் கண்டறியப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் மேற்கண்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட கட்டிடத்தின் compound சுவரில் அமைக்கப்பட்டுள்ள கதவுகள் (Gates) தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019–ன்படி அமைந்துள்ளதா என்பது குறித்து கள ஆய்வு செய்து, அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கோ. கோவிந்தராஜ்,
எண் 22/43, 15வது தெரு,
அசோக் நகர்,
சென்னை–600 083.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

2/9/25
செயலாளர்.